**செய்தி வெளியீடு எண்: 608** **நாள்: 01.09.2018**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (01.09.2018) சேலம் கல்வராயன் மலை, கருமந்துறையில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை</u>**

புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஏற்காடு, ஆத்தூர் இரண்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 10 மலை கிராமங்களுக்கு முதன்முறையாக மின் இணைப்பு வழங்கும் திட்டம் மற்றும் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, கருமந்துறை புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துவக்க விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த இனிய நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கிற கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.காமராஜ் அவர்களே, ஆத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சின்னத்தம்பி அவர்களே, ஏற்காடு சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி சித்ரா அவர்களே, மேட்டூர் சட்டப்பேரவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு. செம்மலை அவர்களே, வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் பி.மனோன்மணி அவர்களே, சங்ககரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.எஸ்.ராஜா அவர்களே, ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களே, உளுந்தூர்பேட்டை சட்டப்பேரவை உறுப்பினர் திரு.குமரகுரு அவர்களே, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் முன்னாள் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் மேற்கு மண்டலத்தின் இணை இயக்குநர் அவர்களே, கோவை மண்டல வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அவர்களே, தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மான

கழகத்தின் மேற்பார்வை பொறியாளர் அவர்களே மற்றும் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்ற அரசு உயர் அதிகாரிகளே, கழகத்தினுடைய முன்னோடி நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, விவசாயிகளே, தொழிலாளிகளே, மலைவாழ் மக்களே, மாணவச் செல்வங்களே, பத்திரிகையாளர் மற்றும் ஊடக நண்பர்களே, பயனாளிகளே, இறுதியாக நன்றியுரை ஆற்ற இருக்கின்ற சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் அவர்களே உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மலைவாழ் மக்களுக்கு ஏராளமான திட்டங்களை வாரி வழங்கினார்கள். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். இருக்கின்ற காலத்திலே, மலைவாழ் மக்களென்றால் அவருக்கு ஒரு தனி பிரியம் உண்டு. எப்பொழுதும் இந்த மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்று எண்ணி, எண்ணி திட்டங்களை வகுத்த தலைவர்கள் இருபெரும் தலைவர்கள். அந்த இருபெரும் தலைவர்களுடைய வழியில் நின்று, அவர்கள் எந்தெந்த திட்டங்களை இந்த மலைவாழ் மக்களுக்கு வழங்கினார்களோ, இந்த விவசாயிகளுக்கு வழங்கினார்களோ, இந்த நாட்டு மக்களுக்கு வழங்கினார்களோ அதையெல்லாம் அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று கல்வராயன் மலை பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து

கொண்டு உங்களுக்கெல்லாம் நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

கல்வராயன் மலைகள் கிழக்கு தொடர்ச்சி மலைத் தொடரின் ஒரு பகுதி பச்சைமலை, ஜவ்வாது மலைகள், சேர்வராயன் மலைகள் ஆகியவற்றுடன் இவை காவிரி ஆற்று வடிநிலத்தை பாலாற்றின் வடிநிலத்திலிருந்து பிரிக்கும் எல்லையாக அமைந்துள்ளன. 1095 சதுர கிமீ பரப்பளவுள்ள இம்மலைகளின் உயரம் 2000 முதல் 3000 அடி வரை உள்ளது. இந்த மலையின் வடபகுதி சின்ன கல்வராயன் என்றும் தென்பகுதி பெரிய கல்வராயன் என்றும் அழைக்கப்படுகிறது. சின்ன கல்வராயன் மலைகள் சராசரியாக 2700 அடி உயரமும், பெரிபய கல்வாராயன் மலைகள் சராசரியாக 4000 அடி உயரம் கொண்டவையாக அமைந்துள்ளன.

சவ்வாது மலையின் தெற்கு முனையிலிருந்து 40 கி.மீ தொலைவில் கல்வராயன் மலைத்தொடர் அமைந்திருக்கிறது. இது காராளன் என்றழைக்கப்படும் மக்களின் பூர்வீக வாழ்விடமாக அமைந்துள்ளது. இம்மலையின் தென்மேற்கு பகுதி சேலம் மாவட்டத்தின் ஆத்தூர், மேற்குப்பகுதி விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வரையும், வடதிசையில் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செங்கம் வரையிலும் பரவியுள்ளது.

கல்வராயன் மலையின் வடக்கே சாத்தனூர் அணையும், தெற்கே ஆத்தூர் கணவாயும், கிழக்கே மணிமுத்தாறு அணையும் மற்றும் சித்தேரி மலையும் அமைந்து இந்தப் பகுதிக்கு நல்ல வளத்தினை அளிக்கின்றது. இந்த மலையில்தான் கோமுகி உற்பத்தியாகி இந்த ஆற்றின் குறுக்கே கோமுகி அணையும் கட்டப்பட்டுள்ளது.

இந்த மலைக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் ஈர்க்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இங்கு கோமுகி அணையும், அதைச் சுற்றி 15 ஏக்கர் அளவில் அழகிய பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் நீராட மேகம், பெரியார், புண்ணியப்பாடி போன்ற அருவிகள் உள்ளன. இங்கு சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறவும், கழிப்பிடம் செல்லவும், குளியலறைக்கும் என தனிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மலையில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கப்பட்டு படகு குழாம் உருவாகியுள்ளது. இதுபோன்ற சுற்றுலாப் பயணிகள் கவர எண்ணற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மிகவும் சுவைமிக்க விளாம்பழம் இங்குள்ள அரசின் பாதுகாக்கப்பட்ட வனப்குதிகளிலும், புதிய காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மலையோர கிராமங்களிலும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது. இதுபோன்ற எண்ணற்ற இயற்கை வளங்களைக் கொண்ட இந்த மலை இனி வருங்காலத்தில் பலதரப்பட்ட மக்களும் வாழும் வகையில் மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இந்த தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்**
**இங்கு ஏழைகள் வேதனை படமாட்டார்**
**உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை**
**அவர் கண்ணீர் கடலிலே விழமாட்டார்**

என்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அவர்கள் வழிவந்த அம்மா அவர்களும், அம்மாவின் அரசும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- பழங்குடியின விவசாயிகளுக்கு துரிதமாக மின்இணைப்பு பெறுவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ.75000 வீதம் 100 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ஜவ்வாது மலையில் இரண்டு உண்டு உறைவிட மாதிரிப் பள்ளிகள் ஆசிரியர் குடியிருப்புகளுடன் 24 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுள்ளது.

- பழங்குடியின மக்கள் அனைவரும் இணையதளம் வாயிலாக பயன் அடையும் வகையில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு இணையதளம் உருவாக்க ஆணையிடப்பட்டுள்ளது.

- பழங்குடியின மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் 42 பழங்குடியினர் நல விடுதிகளும் 314 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

- நடப்பாண்டில் 46 கோடி ரூபாய் செலவில் 19 விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட உள்ளது.

- பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கான உணவு கட்டணம் 900 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கான உணவு கட்டணம் 1000 ரூபாயாக உயர்த்தி அரசு வழங்கி வருகிறது.

- ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தி கீழ் பழங்குடியினர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- அழிந்து வரும் நிலையிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்காக சிறப்பு நிதியுதவியாக 104.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

இதுபோன்று எண்ணற்ற திட்டங்களை பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக அரசு செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் ஏற்காடு, பெத்தநாயக்கன் பாளையம், கெங்கவல்லி, அய்யோதியாப்பட்டினம் மற்றும் கொளத்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 16க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் மலைப்பகுதிகளில் அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் , மலைவாழ் மக்களின் வாழ்க்கை தர மேம்பாட்டிற்கும், வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

- 10 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 628 பசுமை வீடுகள் மலைவாழ் மக்களுக்காக கட்டப்பட்டுள்ளன.

- 13 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்திரா காந்தி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 1192 குடியிருப்புகள் மலை வாழ் மக்களுக்காக கட்டப்பட்டுள்ளன.

- பாரத பிரதமர் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் 15 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 883 வீடுகள் மலைவாழ் மக்களுக்கு கட்டப்பட்டுள்ளன.

- கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 21 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 68 சாலைப் பணிகள் மலைவாழ் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் 16 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 939 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

மேலும் வருவாய்த்துறையின் மூலம் 22,239 பழங்குடியினருக்கு மலையாளி சாதி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.

631 மலைவாழ் மக்களுக்கு வன உரிமைச் சட்டம் 2006ன் கீழ் தனிநபர் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

20 மலைவாழ் மக்களுக்கு வன உரிமைச்சட்டம் 2006ன் கீழ் சமூக உரிமை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வராயன் மலை பகுதிக்குட்பட்ட குன்னூர் மற்றும் சூலாங்குறிச்சி ஆகிய கிராமங்களிலும், ஏற்காடு மஞ்சக்குட்டையிலும் என 3 கிராமங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மலைவாழ் மக்களின் மருத்துவ சிகிச்சைக்காக புதிதாக துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

என கடந்த 8 ஆண்டுகளில் மலைவாழ் மக்கள் வாழும் 16 ஊராட்சிகளில் மாண்புமிகு அம்மாவின் அரசு 167 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12,267 பணிகளை நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி பாராளுமன்ற தொகுதியில் உள்ள ஏற்காடு, ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி ஆகிய 3 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அயோதியாப்பட்டினம், பெத்தநாயக்கன்பாளையம் மற்றும் தலைவாசல் ஆகிய 3 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட மலை கிராமங்களான பள்ளிக்காடு, பெலாப்பட்டி, கோட்டமேடு, வாலுத்து, தாளூர், மண்ணூர், ஆவாரை, எலந்தவாரி, ஆலங்கடை மற்றும் சேட்டூர் ஆகிய 10 மலை கிராமங்களில் 599 வீடுகளுக்கு 2 கோடியே 59 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் புதியதாக மின்பாதை அமைத்து மின்மாற்றிகள் பொருத்தி மின் இணைப்பு வழங்கும் பணிகளுக்கும்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட வளர்ச்சி முகமையின் சார்பில் பெத்தநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கருமந்துரை சந்தைக்கு 25 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர், நடைபாதை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கும்

சின்ன கல்வராயன் மலை, வடக்குநாடு ஊராட்சி கருமந்தறை வார சந்தையில் 14 லட்சத்து 28 ஆயிரம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கும்

என மொத்தம் 2 கோடியே 99 லட்சத்து 34 ஆயிரம் மதிப்பீட்டில் 3 புதிய திட்டப் பணிகளுக்கு இன்றையதினம் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் சார்பில் கருமந்துரை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 2 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 5 பணிமனை கட்டடங்கள் உட்பட 12 கோடியே 78 லட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்ட 15 திட்டப் பணிகளை நான் இன்றைய தினம் திறந்து வைத்துள்ளேன்.

மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை சார்பில் கருமந்தரை மலைப்பகுதியில் 1 கோடியே 25 லட்சம் ருபாய் மதிப்பீட்டில் ஒரு தீயணைப்பு வாகனத்துடன் கூடிய புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையமும் என்னால் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நான் கடந்த முறை கருமந்துரை பகுதிக்கு வந்தபொழுது, தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இந்த மலைவாழ் மக்கள் வைத்தீர்கள். அதை அம்மாவினுடைய அரசால் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏற்கனவே கருமந்துரையில் இயங்கி வந்த சார்பு ஆய்வாளர் (Sub Inspector) நிலையில் இருந்த காவல் நிலையம் ஆய்வாளர் (Inspector) காவல் நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இந்த ஆண்டு ஆத்தூர் நகரில் புதிய காவல் நிலையம் மற்றும் வாழப்பாடியில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையம் துவங்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் காரணமாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் நடைபெறும் இந்த ஆட்சியில், இப்பகுதிகளில் குற்ற நடவடிக்கைகள் விரைவில் கண்டறியப்பட்டு, மேலும் குற்றங்கள் நிகழா வண்ணம் விரைந்து செயல்படுத்த இந்த காவல் நிலையம் உதவி புரியும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழப்பாடியில் இயங்கிவந்த தாலூக்கா அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மலைவாழ் மக்களின் நலனுக்காக இன்று பல்வேறு துறைகளின் சார்பில் 11 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2760 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன். மேலும், இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, ஆத்தூர் நகரில் 14.6 கி.மீ புதிய புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

ஆத்தூர்–பெரம்பலூர் சாலையை விரிவுபடுத்தி, அகலப்படுத்தி, உறுதிபடுத்துகின்ற பணி விரைவில் நிறைவேற்றப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விரைவில் கருமந்துரையில் சாலை சீரமைக்கப்பட்டு, பிறகு பேருந்து போக்குவரத்து துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மினி பஸ் இந்தப் பகுதிக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்று எண்ணற்ற திட்டங்கள் இனி வருங்காலங்களில் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளின் முன்னேற்றத்திற்காக, மலைவாழ் மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்பட உள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் இந்தப் பகுதிக்கு வந்தவுடனேயே இந்தப் பகுதியிலே, பல்வேறு விவசாய பெருமக்களும், பொதுமக்களும் கோரிக்கை வைத்தார்கள். இங்கே, பாரம் ஏற்றி செல்கின்ற லாரிகள் அதிக அளவில் செல்கின்றன. கருமந்துரையிலிருந்து–பாப்பாநாயக்கன்பட்டி செல்கின்ற பாலம் குறுகிய பாலமாக இருக்கின்றது. ஆகவே,

அந்தப் பாலத்திற்கு பக்கத்திலேயே புதிய அகலமான, உறுதியான பாலம் கட்டிக் கொடுக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, மக்களுடைய அரசு. புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக்காலத்தில் பல்வேறு திட்டங்களை மலைவாழ் மக்களுக்காக வழங்கியிருக்கின்றார். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் **1991–**லிருந்து **1996, 2001–**லிருந்து **2006, 2011–**லிருந்து **2016, 2016–**லிருந்து ஆறு மாதங்கள் ஆக மொத்தம் பதினைந்தரை ஆண்டுகாலம் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்று மலைவாழ் மக்களுக்கு பல்வேறு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மா அவர்கள்தான் இந்த மலைவாழ் மக்கள் நல்ல கல்வி கற்கவேண்டும் என்பதற்காக மலைவாழ் மக்கள் பயன்பெறக்கூடிய ஐ.டி.ஐ. கல்லூரியை கருமந்துரையில் கொடுத்தார்கள். அம்மா அவர்கள் மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர். நான் வரும் வழியில் கூட பார்த்தேன் ஒரு குடிசை இருந்தது, அங்கே நிறுத்தி, இறங்கி அவர்களுடன் பேசினேன். அவர்கள் விவசாயம் செய்வதாக சொன்னார்கள், என்னென்ன சாகுபடி செய்திருக்கிறீர்கள் என்று கேட்டேன், நாங்கள் பல்வேறு தானியங்களை பயிரிட்டு, விளைவித்து , எங்களது தேவைக்குப் போக மற்றவைகளை சந்தைக்கு சென்று விற்பனை செய்கின்றோம் என்று அவர்கள் கூறினார்கள். அது மட்டுமல்லாமல், ஆடு வளர்ப்பதையும் பார்த்தேன். மலைவாழ் மக்கள் குடிசையில் வாழ்கின்றோம், ஒரு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். மலைவாழ் மக்களிடத்திலே அம்மாவினுடைய அரசு தனிகவனம் செலுத்தி, குடிசையில் வாழும் அனைத்து மலைவாழ் மக்களுக்கும் பசுமை வீடு திட்டத்தின் கீழ் தேவையான நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டு, அவர்களுக்குத் தேவையானது போல் வீடுகளை கட்டிக் கொள்ளலாம், அதற்கு தனி ஆணை பிறப்பிக்கப்பட உள்ளது. இப்பொழுது ஒரு குறிப்பிட்ட அளவுதான் பசுமை வீடு ஒதுக்கப்பட்டுள்ளது, ஆகவே, அந்த அளவில்தான் வீடு கட்டவேண்டும் என்று உள்ளது, அதை மாற்றி, தங்களுக்கு எந்த அளவிற்கு வீடு கட்டிக் கொள்ள முடியுமோ, அந்த அளவிற்கு வீடு கட்டிக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தரும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்று வரை மின்சாரம் இல்லாத அந்தப் பகுதிகளுக்கு மின்வசதி கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது ஒவ்வொரு பகுதிக்கும் நேரடியாக சென்று மக்களை சந்தித்து, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கவேண்டுமென்று ஆணையிட்டதன்பேரில், சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்ற தொகுதிக்கும், ஏற்காடு, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்கின்ற கிராமத்திற்கு நானே நேரடியாகச் சென்று விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவற்றை வழங்கினேன். அப்பொழுது பல்வேறு கோரிக்கைகள் கொடுத்தீர்கள், அதையெல்லாம் நிறைவேற்றியிருக்கின்றோம். மலைவாழ் மக்கள் வாழ்வதற்காக அவர்களுக்குத் தேவையான கட்டட வசதியுடன் கூடிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும், தேவையான குடிநீர் வசதி, தேவையான சாலை வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி செய்து கொடுக்கப்படும். அடிப்படை தேவைகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, வேளாண்மை சிறக்க பல்வேறு நடவடிக்கைகள், தேவையான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அம்மாவினுடைய அரசு செய்து

கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு சிறப்பான வரவேற்பை கொடுத்தீர்கள், என்றென்றும் நான் மறக்க மாட்டேன். தமிழகத்திலே 32 மாவட்டங்கள் இருக்கின்றன, 32 மாவட்டத்திலே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர்தான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்றார். அனைத்து பகுதிகளுக்கும் நான் நேரடியாக சென்றிருக்கிறேன். அங்குள்ள பிரச்சினைகளும், சிரமங்களும், குறைபாடுகளும் எனக்கு நன்றாகத் தெரியும். அந்தந்த பகுதியிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும், அவர்களது பிரச்சினையை தீர்த்து வைக்க அனைத்து நடவடிக்கையும் அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மாவின் மறைவிற்குப் பிறகு, நான் பொறுப்பேற்று ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்த ஒன்றரை ஆண்டுகாலத்திலே பல்வேறு பிரச்சினைகளை நான் சந்தித்திருக்கிறேன், பல்வேறு போராட்டங்களை நான் சந்தித்திருக்கிறேன். அந்தப் போராட்டம் நடத்துபவர்களையெல்லாம் சந்தித்துப் பேசி அவர்களுக்குத் தேவையான தீர்வும் நான் கண்டிருக்கின்றேன். இந்த ஜனநாயக நாட்டிலே நம்முடைய அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. அதன் அடிப்படையில், நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கவனமாக பரிசீலித்து அதை நிறைவேற்றித் தருவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே, நம்முடைய மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், மலைவாழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அம்மாவினுடைய அரசால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். இங்கே, நான் வந்தபிறகு 110 நபர்களுக்கு கறவை

பசுமாடுகள் கொடுத்துள்ளோம். அதேபோல, வனத்துறையின் மூலமாக கோழி வளர்ப்பதற்கு குஞ்சுகள் கொடுத்துள்ளோம். எனவே, மலைவாழ் மக்கள் கோழிக் குஞ்சுகளை பெருக்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடையலாம். அதேபோல இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக்காலத்திலே கிராமத்திலே வாழ்கின்ற மக்களுடைய பொருளாதாரம் மேம்பாடு அடையவேண்டும் என்பதற்காக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா கறவை மாடுகள், விலையில்லா ஆடுகளை வழங்கினார்கள். அம்மா அவர்கள் ஒவ்வொரு திட்டமும் பார்த்து, பார்த்து உங்களுக்கு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அம்மாவினுடைய அரசு, உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, ஏழைகளுடைய அரசு.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்த ஆட்சியிலே என்ன திட்டத்தை கொண்டு வந்தீர்கள் என்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனை ஆண்டுகாலம் தமிழகத்தில் ஆட்சியில் இருந்தது என்பது நன்றாகத் தெரியும், மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தார்கள். மத்தியிலே ஆட்சியில் இருக்கும்பொழுது தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன திட்டத்தை கொண்டு வந்தார்கள்? புதிய புதிய தொழிற்சாலைகளை கொண்டு வந்தார்களா? தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக ஏதாவது செய்தார்களா? காவிரி நதிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏதாவது செய்தார்களா? முல்லைப் பெரியாறு பிரச்சினை தீர்ப்பதற்காக பாடுபட்டார்களா? எதையும் செய்யவில்லை, சுயநலம் தான் மேலோங்கி நின்றது, அவர்களுடைய பதவி ஆசை தான் மேலோங்கி நின்றது, அவர்கள் அதிகாரத்திற்கு வரவேண்டும், வந்தவுடன் மக்களை மறந்து விடுவார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்தவரைக்கும் இருபெரும் தலைவர்கள்

உருவாக்கிய அரசு, மக்களுக்காக தொடர்ந்து பாடுபடும். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தக் கட்சியை உருவாக்கியது ஏழை மக்களுக்காக. பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 11 ஆண்டுகாலம் ஆட்சி செய்தபொழுது கிராமம் வளர்ச்சி பெற்றது, அவர் மறைவிற்குப் பிறகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பதினைந்தரை ஆண்டுகாலம் ஆட்சி செய்தார்கள். இருபெரும் தலைவர்களும் கிட்டத்தட்ட 27 ஆண்டுகாலம் ஆட்சி செய்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருபெரும் தலைவர்களின் மறைவிற்குப் பிறகு, இருபெரும் தலைவர்களின் வழியிலே ஒன்றரை ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சியை தந்து கொண்டிருக்கின்றது. இன்றைக்கு நாட்டுமக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

நம்முடைய குழந்தைகளுக்கு சிறந்த கல்வி கொடுக்க வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் கல்வியில் புரட்சி, மறுமலர்ச்சி ஏற்படுத்தினார்கள். பள்ளிக் குழந்தைகளுக்கு காலணி, சீருடை, விலையில்லா புத்தகம், நோட்டு, பை, பள்ளிக்குச் செல்வதற்கு விலையில்லா சைக்கிள், அறிவுபூர்வமான விஞ்ஞான கல்வி கொடுப்பதற்கு மடிக்கணினி ஆகியவற்றை, தான் பெற்றெடுத்த குழந்தையாக பாவித்து அத்தனை குழந்தைகளுக்கும் விலையில்லா மடிக்கணினியை கொடுத்து விஞ்ஞான கல்வியை வழங்கியவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இன்னும் 10 ஆண்டுகள் கழித்துப் பார்த்தால், இந்தியாவிலேயே விஞ்ஞான உலகமாக தமிழ்நாடு மாறுவதற்கு அச்சாணி போட்டவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஒரு மாநிலம் சிறந்து விளங்கவேண்டுமென்று சொன்னால், கல்வியிலேயே சிறக்க வேண்டும். அதற்காக

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே செய்த புரட்சிகளின் விளைவாக கல்வி கற்போர் எண்ணிக்கை உயர்ந்தது, கற்றோர் எண்ணிக்கை உயர்ந்தது, உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்றவர்களின் எண்ணிக்கையில் தமிழகம் தான் முதன்மை வகிக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன். புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியிலே 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அவர்கள் வழியிலே வரும் அம்மாவினுடைய அரசு 11 கலை மற்றும் அறிவியில் கல்லூரியை கொடுத்தது, ஆக மொத்தம் அம்மாவினுடைய அரசு 76 கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவியர் குறைந்த கட்டணத்தில் கல்வி கற்கின்ற சூழ்நிலையை அம்மாவினுடைய அரசுதான் வழங்கியது. அரசு என்ஜினியரிங் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, இப்படி ஏராளமான கல்லூரிகளை தமிழகத்தில்தான் அம்மாவினுடைய ஆட்சியில் கட்டிக் கொடுக்கப்பட்டது. அம்மாவினுடைய அரசு தான் ஏழை மக்களை வாழ வைத்த அரசு. மருத்துவத்துறை சிறக்க கிராமந்தோறும் அதிக அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்தது அம்மாவினுடைய அரசுதான்.

அதேபோல, நபார்டு திட்டத்தின் மூலமாக ஐருகு மலை சாலை 9 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட இருக்கிறது. 5 கோடி ரூபாய் செலவில் கொட்டமேடு சாலை பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக அம்மா அவர்கள் எப்படி செயல்பட்டார்களோ அதே வழியில், அம்மாவினுடைய அரசும் அம்மாவினுடைய வழியில்

நின்று மலைவாழ் மக்களின் அடிப்படை தேவைகள் முழுவதும் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்பதை தெரிவித்து, இந்த நிகழ்ச்சி சீரும் சிறப்பாகவும் நடைபெற உறுதுணையாக இருந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அவரோடு துணைநின்ற அரசு உயர் அதிகாரிகளுக்கும், கழகத்தின் சார்பில் பல்வேறு இடங்களில் நல்ல வரவேற்பு நல்கிய ஒன்றிய கழகச் செயலாளர் திரு.ரமேஷ் அவர்களுக்கும், ஒன்றியச் செயலாளர் திரு.முருகேசன் அவர்களுக்கும், கழகத்தின் முன்னோடி நிர்வாகிகளுக்கும் மலைவாழ் மக்களுக்கும், அத்தனை பேருக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**